ஆலோசனைகளைப் பெறுகின்றவிதமாக இளைஞர்களுக்கு வழிகாட்டுகின்றமுகமாக, தொழில் வளர்ச்சி மன்றம் கருத்தரங்கங்களை மாவட்ட அளவிலே நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்கெனவே நமது மதிப்பிற்குரிய, மாண்புமிகு அமைச்சர் திரு. பாண்டுரங்கன் அவர்கள், மாவட்டந்தோறும் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த ஏற்பாட்டின் விளைவாக, பல்வேறு தொழில்களுக்கு, சிறுதொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலமாகத் தொழில் தொடங்கப்பட, ஏற்கெனவே பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் மாவட்டந்தோறும் இதுபோன்ற முயற்சிகளைக் கண்டிப்பாக மேற்கொள்வோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

94—

சுங்க வரி

***17741—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் இயந்திரங்களைப் பயன்படுத்தி மிகப் பெரிய அளவில் தங்க நகைகளை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளுக்குச் சுங்க வரி விதிக்க, மைய அரசுக்குப் பரிந்துரைக்க, மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்க நகைகள் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளுக்கு சுங்க வரிகள் விதித்தல் தொடர்பாக மைய அரசுக்குப் பரிந்துரைக்க தற்சமயம் வாய்ப்பில்லை என்பதைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.